TORONTO
Ward 42, Scarborough–Rouge River

Councillor Neethan Shan

City Hall
100 Queen Street West, Suite B23
Toronto, Ontario M5H 2N2

Tel: 416-392-4078
Fax: 416-696-4159
Email: Councillor_Shan@toronto.ca

April 2018

கடந்த ஆண்டு ரொறன்ரோ மாநகர முதல்வர் ஜோன் ரோறியும் மாநகரசபை உறுப்பினர் நீதன் சண்ணும் ஈழத்தின் வடமாகாணத்துக்குச் சென்றிருந்தபோது வடமாகாணத்துக்கும் ரொறன்ரோ மாநகருக்குமிடையே கல்வி. பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக யாழ்ப்பாணப் பொதுநூலகத்துக்கும் ரொறன்ரோ நூலகத்துக்குமிடையிலான நூல் பரிமாற்றத் திட்ட முன்னெடுப்பு ஏப்பிரல் 22, 2018 ஞாயிறு பிற்பகல் ரொறன்ரோ - மல்வேர்ண் நூலகத்தில் நடைபெற்றது.

ரொறன்ரோ மாநகர முதல்வர் ஜோன் ரோறி, மாநகரசபை உறுப்பினர் நீதன் சண், ரொறன்ரோ நூலக அறக்கட்டளையின் சார்பில் ரொறன்ரோ பொது நூலக தலைமை நிறைவேற்று அலுவலர் Vickery Bowles அம்மையார் ஆகியோர் உரையாற்றினர். வடமாகாண முதல்வர் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் அவர்களின் வாழ்த்துச்செய்தியும் வாசிக்கப்பட்டது.

நிறைவில் ரொறன்ரோ நூலகத்துக்கும் வடமாகாண சபைக்குமிடையிலான நூல்களின் பரிமாற்றம் இடம்பெற்றது. ரொறன்ரோ நூலக அறக்கட்டளையின் சார்பில் Vickery Bowles அம்மையார் அவர்களும் ஜோன் ரோறி அவர்களும் வடமாகாணசபை சார்பில் திரு ரவீன் விநாயகமூர்த்தியும் நூல்களைப் பரிமாறிக்கொண்டனர்.